**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC. 08/2017.** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.7 பாப்பாத்தி** |
| **Fathers Name/Husband Name** | : | **பழனிமுத்து** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.09.2022

---

**முதல் விசாரணை:**

1.நான் பொம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்த பழனிமுத்து எனது கணவர் ஆவார். நான் சம்பவத்தின் போது நான் ஊரில் தோட்டத்தில் வேலைக்கு சென்றிருந்தேன். என்னுடன் சாட்சிகள் செல்வராஜ் மனைவி பாப்பாத்தி, உமா, ராஜாத்தி, மகாலட்சுமி ஆகியோர் வேலை பார்த்து கொண்டு இருந்தார்கள். எனக்கு செல்வராஜின் மனைவி பாப்பாத்தி விபத்து குறித்து தகவல் சொன்னார். அதன்பேரில் நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தபோது அவருக்கு வயிற்றில் லாரி ஏறி அடிபட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். எங்கள் ஊரை சேர்ந்து செல்வராஜ், இருளாண்டி மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். அவர்களது உறவினர்களும் மருத்துமவனைக்கு வந்திருந்தார்கள்.

2. எனது கணவர் பிக்அப் வேனில் பூக்களை ஏற்றிக்கொண்டு சென்றபோது வண்டி சாய்ந்ததில் லாரி அவர் மீது ஏறிவிட்டதாக சொன்னார்கள். போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3. எனது கணவர் இறந்ததற்கு இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த இடத்திற்கு சென்று நான் எதையும் விசாரிக்கவில்லை. எனது கணவர் சென்ற வாகனத்தின் ராடு கட்டாகி விபத்தில் சிக்கிக்கொண்டது என்றும் எதிரி வந்த லாரி மோதி விபத்து ஏற்படவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக லாரி மோதியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Pappathi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.